S.C. No: 31/2022

பெயர் : பழனிசாமி

**அ.சா. 7**

06-03-2025

(2 ஆம் எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 1 ஆஜரில்லை. 1 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355-இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்கு விசாரணை**

சுந்தரேசன் என் அண்ணன் . ரமேஷ் அண்ணன் பையன் . சொத்து சம்மந்தமாக சுந்தரேசனுக்கும் செந்தில் குமாருக்கும் இடையே பிரச்சனை உள்ளது என்றால் ஆமாம் . சொத்து பிரச்சினை உள்ளது என்ற விவரத்தை போலிசார் விசாரித்த போது சொன்னேனா என்றால் சொன்னேன். வழக்கில் பிரச்சனைகுரிய இடமான சத்திரகாசன் இடம் என்று நான் சொன்னதற்கு ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் ஆமாம் . சந்தானகிருஷ்ணனிடமிருந்து சந்திரகாசன் இடம் வாங்கிய தொடர்பான ஆவணங்களை நான் பார்த்ததில்லை. சந்திரகாசனுக்கு பின்னர் ராஜேந்திரன் இந்த இடத்தை அனுபவித்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை . 20 பத்திரத்தில் கையெழுத்து வாங்கினார்கள் என்று சொல்லியிருக்கிறேன் . அந்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை. சந்தோஷ்க்கும் சுரேஷ்குமாருக்கும் ராஜேந்திரன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் நேரடியாக பார்க்கவில்லை . கேள்விபட்டது தான். தம்பி சொன்னார். அங்காளம்மன் கோவில் அருகில் எதிரி நின்று மிரட்டிய விவரம் என் மருமகன் சொன்னார் . நான் பார்க்கவில்லை. சந்தோஷ் என் தம்பியை மிரட்டியதை நான் நேரடியாக பார்க்கவில்லை . இறந்து கிடந்த இடத்திற்கு நான் காலை 6.30 மணிக்கு போனேன். நான் போய் 1 மணி நேரம் கழித்து போலிசார் அங்கு வந்தார்கள். சந்தோஷ், செந்தில் குமார் என் தம்பியிடம் இடத்தை கேட்டு பிரச்சனை செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் தம்பி இறந்து கிடந்த இடத்திற்கு அருகிலேயே ஆனந்துக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் கிழக்கே உள்ளது . அந்த வீட்டில் ஆனந்த் , அவர் மனைவி , குழந்தைகளுடன் காளவாய் போட்டு வசித்து வருகிறார். என் தம்பி இறந்து கிடந்த இடத்திற்கு அருகில் அருகருகே வயல்

உள்ளது என்றால் திடல் தான் உள்ளது . அரசு மது பான கடை அருகில் உள்ளது என்றால் 3 கிமீ தள்ளியுள்ளது . இறந்து போனவர் இடத்திற்கு அருகில் உள்ள ரோட்டை பயன்படுத்தி தான் அரசு மது பான கடைக்கும் , அருகில் உள்ள இடத்திற்கும் போக முடியும் என்றால் ஆமாம் . அது ஆண்டலான் பேட்டை ரோடு . இடம் சம்மந்தமாக திருநீலக்குடி காவல் நிலையத்தில் ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டுள்ளது. வழக்கிற்கு 1 மாதத்திற்கு முன்பு இந்த புகார் கொடுக்கப்பட்டது. ராஜேந்திரன் இறந்த இடம் எனக்கோ என் தம்பிக்கோ சொந்தமில்லை. அரசு புறம்போக்கு என்றால் சரியல்ல . எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும் இறந்து போனவர் என் தம்பி என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . சுந்தரேசன் என் தம்பி மகன் என்பதால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் பகை இருப்பதால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.